செ.வெ.எண்: 83 நாள்26.10.2017.

# பத்திரிக்கைச் செய்தி

சமூகநல இயக்கக கட்டுப்பாட்டின்கீழ் செயல்படும் அரசு குழந்தைகள் காப்பகங்கள்/அரசு சேவை இல்லங்களில் இளநிலை இல்ல காப்பாளர் பணியிடங்களை பூர்த்தி செய்யும் பொருட்டு தாம்பரம், கடலூர், தஞ்சாவூர், சேலம், மதுரை, சிவகங்கை மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் உள்ள சேவை இல்லத்தில் பயின்ற முன்னாள் மாணவிகளிடமிருந்து கீழ்கண்ட படிவத்தில் பூர்த்தி செய்து சம்மந்தப்பட்ட மாவட்ட அரசு சேவை இல்லம், மாவட்ட சமூகநல அலுவலகம் அல்லது சமூகநல இயக்குநர், சமூகநல இயக்ககம், பனகல் மாளிகை, 2–வது தளம் சென்னை–15 என்ற முகவரிக்கு 5.11.2017–க்குள் விண்ணப்பத்தினை நேரடியாக அனுப்பி வைக்கும்மாறு தெரிவிக்கப்படுகிறது.

முன்னாள் சேவை இல்ல மாணவிகள் அரசு சேவை இல்லங்களில் உள்ளுறைவோராக தங்கி பயின்ற முன்னாள் மாணவிகளாக இருந்ததோடு பள்ளி இறுதி வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்கவேண்டும். வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து வேலைவாய்ப்பு அட்டையை கைவசம் வைத்திருக்க வேண்டும். மேலும் வயது வரம்பு 25 முதல் 35 வரை இருக்க வேண்டும். ஆதரவற்றோர், விதவைகள் மற்றும் கணவரால் கைவிடப்பட்டவர்கள் எனில் 25 முதல் 40 வயது வரை இருக்க வேண்டும். தகுதியான மாணவிகள் கீழ்கண்டவாறு படிவத்தில் பூர்த்தி செய்து விண்ணப்பம் சமர்ப்பிக்கும்மாறு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. கு. கோவிந்தராஜ் இ.ஆ.ப அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

## <u>படிவம்</u>

| | | |
|---|---|---|
| 1. | பெயர் | |
| 2. | பிறந்த தேதி | |
| 3. | கல்வித் தகுதி | |
| 4. | இனம் | |
| 5. | சேவையில்லத்தில் கல்வி பயின்ற வகுப்பு மற்றும் ஆண்டுகள் | |
| 6. | விடுவிக்கப்பட்ட நாள் | |
| 7 | ஆதரவற்றவர்/கணவனால் கைவிடப்பட்டவர்/விதவை சான்று சமர்ப்பிக்க வேண்டும் | |
| 8 | வேலைவாய்ப்பகத்தில் பதிவு செய்த நாள் | |
| 9. | வேலைவாய்ப்பக அட்டை எண்/நாள் மற்றும் புதுப்பித்த நாள் | |
| 10 | எந்த மாவட்டத்திலும் பணி செய்ய விருப்பம் | உண்டு / இல்லை |
| 11 | முன் அனுபவ விபரம் | |

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கரூர்.**